**செ.வெ. எண்: 476** **நாள்: 11.08.2012**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(11.8.2012)** தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் **94** கோடியே **49** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நான்கு தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களையும், மூன்று புதிய துணை மின் நிலையங்களையும் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாட்டின் மின் உற்பத்தியை அதிகரிக்கவும், தமிழகத்தை மின்மிகு மாநிலமாக மாற்றிடவும், மாநிலம் முழுவதும் மின் விநியோகத்தை சீர்படுத்தி மக்களுக்கு தடையற்ற சீரான மின்சாரம் வழங்கிடும் உயரிய நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. அவ்வகையில், புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதன் மூலம் அப்பகுதிகளில் புதிய மின் தேவையை பூர்த்தி செய்ய இயலும்; மேலும், மின்பாதையில் ஏற்படுகின்ற மின்சக்தி இழப்பைக் குறைத்து மின்பராமரிப்பு செலவினங்கள் குறைக்கப்பட்டு, குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படுகின்ற உச்சக்கட்ட மின்தேவையை சீர்செய்து, சரியான மின் அழுத்தத்துடன் மக்களுக்கு சீரான மின்சாரம் வழங்க இயலும்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் **9** கோடியே **67** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **110/11** கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் பெட்டவாய்த்தலையில் **4** கோடியே **60** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **110/11** கி.வோ. துணை மின் நிலையம்; திருவாரூர் மாவட்டம், உள்ளிக்கோட்டையில் **4** கோடியே **70** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **110/11** கி.வோ. துணை மின் நிலையம்; தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிபட்டியில் **8** கோடி ரூபாய் மதிப்பீட்டில் **110/33–11** கி.வோ. துணை மின் நிலையம் ஆகிய நான்கு தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களையும்;

திருவள்ளூர் மாவட்டம், அத்திப்பட்டில் **27** கோடியே **18** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **230/110/33** கி.வோ. துணை மின் நிலையம்; தேனி மாவட்டம், குள்ளப்பகவுண்டன்பட்டியில் **6** கோடியே **38** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **110/22** கி.வோ. துணை மின் நிலையம்; தஞ்சாவூர் மாவட்டம், கரம்பயத்தில் **33** கோடியே **96** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் **230/110** கி.வோ. துணை மின் நிலையம் ஆகிய மூன்று புதிய துணை மின் நிலையங்கள், என மொத்தம் **94** கோடியே **49** லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஏழு துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்புதிய துணை மின் நிலையங்கள் மூலம், அந்தந்த துணை மின் நிலையங்களை சுற்றி அமைந்துள்ள கிராமங்களுக்கு மின்பாதை இழப்பைக் குறைத்து சீரான மின்சாரம் வழங்க வழிவகை ஏற்படும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மின்தொடர் அமைப்புக் கழகத்தின் தலைவர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**
நாள்: 11.8.2012